**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி – 2015**

தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 இன் 1882/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பல்கலைக்கழகக் கல்லூரியின் ஸ்தாபிப்பு**

2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் 2014 ஒக்தோபர் 01 இலிருந்து செயற்பட வேண்டுமென தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கட்டளையின் கீழ் இணைந்த நிறுவனமொன்றாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திற்குச் சமமான தேசிய தொழில்சார் தகைமை மட்டங்கள் 5, 6 மற்றும் 7 என்பவற்றுடன் தொழில்நுட்ப கற்கைநெறிகள் என்பவற்றை நடாத்துவது பல்கலைக்கழகக் கல்லூரியின் பிரதான நோக்கமாகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| நிதிப்பிரமாணம் 135(4) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் வருடாந்தம் கையளிக்கப்பட்ட தொழிற்பாடுகள் தொடர்பான விபரமான நாளதுவரையாக்கப்பட்ட பட்டியல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 136(6) | அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுடைய பதிவேடுகள் அவற்றினை சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை ஒப்பீடுசெய்யப்பட்டு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 262(3) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,993,584 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் தொடர்பான இருநூறு ஆதாரப்படுத்தும் ஆவணங்களில் கொடுப்பனவு உத்தியோகத்தர் முதலெழுத்தொப்பமிட்டு திகதி முத்திரை பொறித்திருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 272(1) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவற்றுடன் தொடர்புடைய மாதத்தின் இறுதியிலிருந்து ஆறு வாரங்களிற்கு பிந்தாமல் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 756 | 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 1645 | வாகனங்களிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒவ்வொரு வாகனத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட பிரயாணத்தின் மாதாந்த பொழிப்பு மற்றும் ஒவ்வொரு மாதத்திற்குமான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் என்பவற்றை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 1646 | திருத்தங்கள் மற்றும் பராமரிப்பின் விபரங்களைப் பதிவுசெய்வதற்கு வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பல்கலைக்கழகக் கல்லூரிக்கான செயற்பாட்டுக் கைநூல்**

| | |
|---|---|
| 4.6.2(எ) பிரிவு | மாணவர்களின் தனிநபர் கோவைகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| 4.6.2(எ) பிரிவு | மாணவர் அடையாள அட்டை அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| (i) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பல்கலைக்கழகக் கல்லூரியின் கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் கல்லூரியின் வாகனங்களிற்கு இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் தொழிற்பாடுகள் ரூபா 853,084 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தது.
மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகக் கல்லூரியின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 89,646,048 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 63,093,653 ஆக இருந்த போதிலும் இது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான ரூபா 38,421,673 பெறுமானத்தேய்வை உள்ளடக்கியுள்ளது அல்லது இது மொத்த செலவினத்தின் 61 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

மேலதிகநேர வேலை, பிரயாணக் கோரிக்கைகள், நிலையான சொத்துக்கள் மற்றும் முற்பணங்கள் போன்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவுசெய்வதற்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணிப்பாளர் குழுவானது பல்கலைக்கழகக் கல்லூரிக்கு இணைப்புச் செய்யப்பட்ட கல்விசார் பதவியணியினர் அனைவரும் கைவிரல் அடையாள இயந்திரத்தில் வரவினை பதிவுசெய்ய வேண்டுமென பணித்திருந்த போதிலும் பணிப்புரையானது கல்விசார் பதவியணியினரால் பின்பற்றப்படவில்லை.

(ஆ) பதவியணியினரால் எடுக்கப்பட்ட விடுமுறை தொடர்பில் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட அநேகமான விடுமுறை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விடுமுறைப் பதிவேடுகள் மற்றும் குறுகிய விடுமுறைப் பதிவேடுகள் என்பன முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருத்தமான பதிற்கடமை ஒழுங்குகள் இல்லாமல் உத்தியோகத்தர்கள் விடுமுறையில் இருப்பதனால் அவசரமான வேலை ஏனைய பதவியணியினரால் மேற்கொள்ளப்படாமல் தாமதமாகியிருந்தது.

## 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகக் கல்லூரியால் 10 கல்விசார் மற்றும் 03 கல்விசாரா பதவிகளில் நிலவிய 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியால் பேணப்பட்ட தனிநபர்க் கோவைகளில் உடன்படிக்கைகள், சொத்து வெளிப்படுத்தல்கள், வரலாற்றுச் சான்றிதழ்கள், பொது 176, 169 மற்றும் 278 போன்ற ஆவணங்கள் காணப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 112 மில்லியன் பெறுமதிக்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் வெடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அக் கட்டிடத்தின் பகுதி சேதமடைந்திருந்தது. ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதியினுள் கட்டிடத்தை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் இது தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனைத்து வாகனங்களும் திறந்தவெளியில் நிறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் கல்லூரியின் பெறுமதியான வாகனங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக வாகனத் தரிப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இருப்புப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்காததனால் கொள்வனவுத் திகதி, கொள்வனவு செய்யப்பட்ட உருப்படியின் பெறுமதி மற்றும் பொருள் உருப்படிகளை பெற்ற திகதி என்பன பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களஞ்சியப் பொருட்கள் களஞ்சிய பொறுப்பாளரால் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4.5 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

வாகன ஓட்ட அட்டவணை பேணுதல் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- எரிபொருள் கட்டளை இலக்கம், திகதிகள் மற்றும் எரிபொருள் சிட்டைகளின் இலக்கங்கள் என்பன வாகனத்தின் ஓட்ட அட்டவணைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

- வாகன ஓட்ட அட்டவணைகளில் பிரயாணங்களின் நோக்கம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

- உத்தியோகத்தர்கள் வாகனங்களைப் பயன்படுத்திய பின்னர் கையொப்பமிடுவதற்கு தவறியிருந்தனர்.

- வாகன அசைவுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

- வாகன செயலாற்றல் பொழிப்பு மாதாந்தம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 30 இற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2016 மே 18 இல் மாத்திரமே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்கம் மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய பிஈடி/ஆர்ஈடி/01/04/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 வணிகத் திட்டம்**

பல்கலைக்கழகக் கல்லூரிக்கான செயற்பாட்டுக் கைநூலின் 2.4 ஆம் பிரிவின் பிரகாரம் 3 ஆண்டுகள் காலப்பகுதிக்கான வணிகத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 வணிகப் பிரிவின் ஸ்தாபிப்பு**

பல்கலைக்கழகக் கல்லூரிக்கான செயற்பாட்டுக் கைநூலின் 2.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் வணிகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஸ்தாபிப்பு**

கல்லூரிக்கான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்குத் தவறியதால் கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பல திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**5.6 கணக்காய்வுக் குழுக் கூட்டம்**

2005 யூலை 01 ஆம் திகதிய பிஈடி/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை சபை ஸ்தாபித்திருந்த போதிலும் 2015 இல் தனியான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கல்லூரியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாடுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | களஞ்சிய நிர்வாகம் | களஞ்சிய இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகனங்களின் பயன்பாடு | வாகனங்கள் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருக்கவில்லை. |